கருமத்தம்பட்டி நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திருமதி.கு.த.பாரதி.பி.இ

ந.க.எண்355/2025/எப்1 **நாள்.06.08.2025**

பொருள்: மனைபிரிவு – கருமத்தம்பட்டி நகராட்சி – சர்வே எண்.101/1A,102/1B யில்– அமைந்துள்ள 19750 ச.மீட்டர் (4.88 ஏக்கர்) பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைபிரிவிற்கு – ஒப்புதல் வழங்குவது – தொடர்பாக.

பார்வை:

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.CBELPA/BQ67342D/2024/2025/TCP நாள்.06.03.2025.
2. மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட தான சாசனப் பத்திர எண்.3331/2025 நாள்.28.02.2025
3. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களின் செயல்முறை ஆணை மாவட்ட நகர் ஊரமைப்புத் துறை கோ.உ.தி.கு அனுமதி எண்.107/2025 நாள்.06.03.2024.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டி.பி2 நாள்.20.10.2022.
5. நன்னிலை கட்டணம் ரூ.25000/– கருவூலக இரசீது எண்.168/KMO/02/25–26/0009186 நாள்.06.08.2025.
6. திரும்ப பெற கூடிய வைப்புத்தொகையாக ரூ.500000/– ரசீது எண்.168/KMO/02/25–26/009187 நாள்.06.08.2025.
7. அபிவிருத்திக் கட்டணம் ரூ.83000/– ரசீது எண். 168/KMO/02/24–25/0009185 நாள்.06.08.2025.
8. கூராய்வுக் கட்டணம் ரூ.42000/– ரசீது எண். 168/KMO/02/24–25/0009184
9. காலியிட வரித்தொகை ரூ.970000/– 83 மனைகளுக்கு செலுத்தப்பட்டுள்ளது. (இரசீது நகல் தனியாக இணைக்கப்பட்டுள்ளது)
10. நகர்மன்றத்தீர்மான எண்.943 /2025 நாள். 30.07.2025

****

உத்தரவு:–

கருமத்தம்பட்டி நகராட்சி நகரளவு எண். 101/1A,102/1B அமைந்துள்ள 19750 ச.மீட்டர் (4.88 ஏக்கர்) பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைபிரிவிற்கு, பார்வை 1–ல் கண்டுள்ள கடிதத்தின்படி சாலை, அமைப்பு வரைபடத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளபடி, பார்வை2–ல் கண்டுள்ள தானப்பத்திரம் மூலம் சாலையினை நகராட்சிக்கு பதிவு செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவிற்கு பார்வை 3ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் / துணை இயக்குநர் (பொ) கோவை அவர்களின் செயல்முறை ஆணையில்

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. (ம.வ./ந.ஊ(தி.மா) எண். 130 /2025).

மேற்படி மனைப்பிரிவிற்கு பார்வை 10-ல் கண்டுள்ள நகர் மன்ற தீர்மானத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பார்வை 5,6,7,8, மற்றும் 9 -ன்படி உரிய கட்டணங்கள் நகராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது. எனவே, நகர் ஊரமைப்புத் துறையால் வழங்கப்பட்ட நிபந்தனைகள், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பார்வை 7-ல் தெரிவித்துள்ளபடி தங்களால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி பணிகளுக்கு மட்டும், மொத்த மனைகளின் எண்ணிக்கையில் 60 விழுக்காடு அபிவிருத்தி அடையும்வரை அல்லது ஐந்து வருட காலத்திற்கு தாங்களே பராமரிக்க வேண்டும் என்ற நிபந்தனைகளோடு குடியிருப்பு மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

06/08/25

ஆணையாளர்
கருமத்தம்பட்டி நகராட்சி

6/8/25

இணைப்பு :-

1. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைபிரிவு வரைபடம்
2. நகர் ஊரமைப்பு துறையால் வழங்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள்.

பெறுநர்

M/S Ramanuj Cotton Corporation
348 /1B Floor ,Avinashi Road,
Peelamedu ,Coimbatore.641004

நகல்

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் கோயம்புத்தூர் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.
2. சார்பதிவாளர், சூலூர்.
3. நகராட்சி பொறியாளர், மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள சாலைகளை, சாலைப் பதிவேடு மற்றும் UTIS மென் பொருளில் பதிவு செய்திட
4. வருவாய் ஆய்வர், கருமத்தம்பட்டி நகராட்சி
5. நகரமைப்பு ஆய்வாளர், கருமத்தம்பட்டி நகராட்சி.